திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்தில் இருந்து எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா? எத்தனை படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இராமேஸ்வரம் என்று இல்லை. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இன்னமும் 89 படகுகள் கொடுக்கப்படவேண்டியிருக்கின்றன.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த விசைப் படகுகள் கோரி நிறைய மனுக்கள் வருவதால் அத்தனை பேர்களுக்கும் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மனுக்கள் கொடுக்கிறவர்களில் தகுதி உள்ளவர்களுக்குத்தான் கொடுக்கலாம். தகுதி பெற்றிருக்கிறார்களா என்று பரிசீலனை செய்ததற்குப் பிறகுதான் குலுக்கல் சீட்டு முறையின் மூலமாகப் படகுகள் வழங்கப்படுகின்றன.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, does the Hon. Minister know that most of the 36-foot mechanised boats are out of order and if so, have the Government probed into the reasons for that?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வி. மெக்கனைஸ்டு போட்ஸ் எத்தனை சீரடைந்திருக்கின்றன என்ற தகவல் என்னிடத்திலே இல்லை.

நைலான் வலை தயாரிப்பு

*308 **வினா—திரு.** எம். முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நைலான் மீன் வலை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(இ) ஆமெனில், எப்போது எந்த மாவட்டத்தில் ?

1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) தமிழ்நாட்டில் நைலான் வலை செய்யும் தொழிற்சாலை ஒன்று அமைக்க தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம் முடிவு செய்துள்ளது.

(இ) அத் தொழிற்சாலையை சென்னையில் அமைக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது சென்னையில் அமைக்க ஏற்பாடு நடைபெறுவதாகக் கூறினார்கள். வட செங்கற்பட்டு மாவட்டத்தில் எண்ணூர் பகுதியிலாவது ஆரம்பாக்கம் பகுதியிலாவது ஏற்படுத்தினால் ஏராளமான மீனவர்கள் இருக்கும் பகுதியாக இருப்பதால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். அதை அமைச்சரவர்கள் கவனிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மீன் வலை நெய்யத்தான் இந்தத் தொழிற்சாலை. தமிழகத்தில் உள்ள எல்லா மீனவர்களுக்கும் இந்த வலையைக் கொடுக்க வேண்டும். ஒரு பகுதியில் அதிகமான மீனவர்கள் இருக்கிறார்கள் என்பதற்காக தொழிற்சாலையை அங்கு வைக்க வேண்டுமென்பது முறையல்ல. தொழிற்சாலை வைப்பதற்கான தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டதில் சென்னை தகுந்த இடமாக இருக்கிறது. ஆகவேதான் சென்னையில் வைப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

Ex-gratia payments for fishermen's families.

* 309 Q.—THIRU K. P. KANDASWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) the number of petitions requesting ex-gratia grant received during 1971-72 from the families of the fishermen who had lost their lives in the sea; and

(b) the amount distributed as such grants?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 50 மனுக்கள்.

(இ) ரூ. 53,000.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS